7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்,

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

46. வேலை வாய்ப்புப் பயிற்சித் துறையின் சார்நிலைப் பணியின் கீழ்வரும் தொழில் வணிக ஆசிரியர் பதவிகளை அரசுத் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் கொண்டு வருவது குறித்து தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 12–12–1979 ஆம் தேதியிடப் பெற்ற 1334 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5)–பிரிவின் கீழ்] பேரவைமுன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*61. கோரிக்கை எண். 20— வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1980–81 (தமிழ்–ஆங்கிலம்).

*62. 1979–80 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறைக்கான செயல்வினை முறைத் திட்டம் (தமிழ்- ஆங்கிலம்).

@63. கோரிக்கை எண் 26— கைத்தறி மற்றும் பஞ்சாலை பற்றிய கொள்கையும், திட்டங்களும் 1980–81 (தமிழ் ஆங்கிலம்),

@64. 1980–81 ஆம் ஆண்டின் கைத்தறி துணி நூல் துறையில் சாதனைத் திட்டம், (தமிழ்–ஆங்கிலம்).

@65. கோரிக்கை எண், 27– தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில்கள் வாரியம் பற்றிய கொள்கையும், திட்டங்களும், 1980–81 (தமிழ்- ஆங்கிலம்)

@66. 1979–80–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகஸ் கழகத்தின் ஆய்வுரை (தமிழ் – ஆங்கிலம்).

* 67. வேளாண்மை குறித்த 3 சிறிய புத்தகங்கள் வேளாண்மைத் துறையில் வெளியானது) (தமிழ்).

---

*15–7–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

@16–7–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.